**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2023–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ம் நாள் செவ்வாய் கிழமை
2054 திருவள்ளுவராண்டு சோபகிருது வருடம் மார்கழித் திங்கள் 24 ம் நாள்

I.A.1/2023
IN
OS.No.90/2021

1. தமனந்தி @ தமயந்தி
2. சுரேஷ். . . . மனுதாரர்கள்/3, 4 ம் பிரதிவாதிகள்

//எதிராக//

1. சக்ரபாணி,
2. முத்துலெட்சுமி, . . . 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. முருகேசன்,
4. ஜெயபாரதி,
5. கிராம நிர்வாக அலுவலர், மாத்தூர் கிராமம்.
6. வட்டாட்சியர், குளத்தூர்.
7. மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை. . . . 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1, 2, 5, 6, 7 பிரதிவாதிகள்.

இம்மனுவானது, இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு 15.12.2023–ம் தேதி வந்தபோது மனுதாரர்கள்/3, 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஆரோக்கியசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.A. ஜெயராஜ், B.Sc., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. S. நடராஜன், M.A., LL.B., அவர்கள் முன்னிலையாகியும் 3, 4 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக உள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.01.09 17:58:20 +0530

## உத்தரவு

மனுதாரர்களால் செலுத்தி வைக்கப்படும் அனுபவ பாத்தியத்திற்கான நீதிமன்ற கட்டணத்தை ஏற்றுக்கொண்டு எதிர்வழக்குரை நிராகரிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து எதிர்வழக்குரையினை ஏற்றுக்கொள்ள வேண்டி உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1. மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி. மனுதாரரால் 4ம் பிரதிவாதிக்காகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது இம்மனுதாரர்களுக்கு எதிராகவும், மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கடந்த 08.03.2023ம் தேதி Pw1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர் தன் தரப்பு எதிர்வழக்குரையினை தாக்கல் செய்திருந்த நிலையில் அதில் அனுபவ பாத்தியம் கோரி கட்சி செய்திருந்த காரணத்தினால் அதற்கு உரிய நீதிமன்றக் கட்டணம் செலுத்த நீதிமன்ற அறிவுறுத்தியிருந்த நிலையில் அது விபரத்தை மனுதாரர்களின் வழக்கறிஞர் மனுதாரகளுக்கு தெரிவித்திருந்தார். மனுதாரர்கள் தங்களின் அன்றாட பிழைப்பிற்கே மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றனர். இருந்தும் மனுதாரர்கள் தாவா 2ம் அயிட்டச் சொத்தில் மனுதாரர்களால் கட்டப்பட்டுள்ள மனுதாரர்களின் வசிப்பிட வீட்டிற்கான மதிப்பை பெறவேண்டி பல பொறியாளர்களை அணுகியும் உரிய காலத்தில் மதிப்பீட்டு சான்று பெற முடியாமல் போய்விட்டது. இதற்கிடையில் மனுதாரர்கள் அனுபவ பாத்தியத்திற்காக உரிய நீதிமன்றக் கட்டணம் செலுத்தி வைக்காத காரணத்தினால் மனுதாரர்கள் எதிர்வழக்குரையானது நிராகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. பெரும் முயற்சி செய்து 2023ம் வருட மார்ச் மாத முதல் வாரத்தில் தான் பொறியாளர் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே அரும்பாடுபட்டு மனுதாரர்கள் செலுத்தி வைக்க வேண்டி நீதிமன்ற கட்டணத்தையும் செலுத்து வைத்துள்ளார். அதனை ஏற்றுக்கொண்டு எதிர்வழக்குரை நிராகரிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து எதிர்வழக்குரையினை ஏற்றுக்கொள்ள இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.01.09 17:58:27 +0530

**<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

2. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. அசல் வழக்கானது 2020ம் ஆண்டு தொடக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு மனுதாரர்கள் தரப்பில் மோசடியான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த எதிர் வழக்குரையில் எதிரிடை அனுபவ பாத்தியம் கோரியிருந்த காரணத்தால் அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்துமாறு 01.09.2022ம் தேதி நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது. அதன்பிறகு பலமுறை வாய்ப்பு வழங்கியும் மனுதாரர்கள் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. அதனால் 30.09.2022ம் தேதி மனுதாரர்களின் எதிர்வழக்குரையில் கண்ட எதிரிடை அனுபவ பாத்தியமானது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதிகள் தரப்பில் 07.02.2023ம் தேதி முதல் விசாரணை சாட்சியம் முன்னிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தொடர்ந்து ஆஜரான நிலையில் மனுதாரர்கள் தரப்பில் எவ்வித அறிவுறுத்தலும் இல்லை என கூறியதால் 08.03.2023ம் தேதி மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3. மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கியும், எதிரிடை அனுபவ பாத்தியத்தை பொறுத்து நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தால் எதிர்வழக்குரையே நிராகரிக்கப்பட்டு 30.09.2022ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிடை அனுபவ பாத்தியத்தை பொறுத்து மனுதாரர்களின் எதிர்வழக்குரை நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் இதர எதிர்வழக்குரை சங்கதிகளை பொறுத்து மனுதாரர்கள் தொடர்ந்து வழக்கை நடத்தி வந்தனர். இந்நிலையில், எதிர்வழக்குரைக்கு உரிய நிதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய வாய்ப்பு முடிக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் அந்த நீதிமன்ற கட்டணம் செலுத்த அனுமதிப்பதற்கு சட்டத்தில் வழிவகை இல்லை. பொய்யான விபரங்களுடன் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

C RAJESH

Digitally signed by C RAJESH
Date: 2024.01.09 17:58:33 +0530

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

**5. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. அசல் வழக்கானது விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது இந்நிலையில், மனுதாரர்களான 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் 30.09.2022ம் தேதி நிராகரித்து உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு நிராகரித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கியும், நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறியதால்தான் அவர்களது எதிர்வழக்குரை நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும், காலம் கடந்து தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க சட்டத்தில் வழிவகை இல்லை என்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது.

7. மனுதாரர்களால் 01.11.2021ம் தேதி அசல் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரை பத்தி 17ல் தாவா சொத்துக்களில் அவர்களுக்கு எதிரிடை அனுபவ பாத்தியம் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அதை பொறுத்து பரிசீலனை செய்த இந்நீதிமன்றம் எதிரிடை அனுபவ பாத்தியம் தொடர்பான கோரிக்கையை பொறுத்து உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்துமாறு 01.09.2022ம் தேதி இந்நீதிமன்றத்தால் மனுதாரர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்பிறகு உரிய வாய்ப்பு வழங்கியும் நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறியதால் 30.09.2022ம் தேதி மனுதாரர்களின் எதிர்வழக்குரையை நிராகரித்து இந்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிரிடை அனுபவ பாத்திய கோரிக்கையை பொறுத்து மட்டும் நீதிமன்ற கட்டணம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் அந்த நீதிமன்ற கட்டணத்தை செலுத்த தவறியுள்ளனர். அதன் காரணமாகவே எதிர்வழக்குரை நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிரிடை அனுபவ பாத்தியத்தை பொறுத்து மட்டும்

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.01.09 17:58:38 +0530

எதிர்வழக்குரையை நிராகரிக்காமல் முழு எதிர்வழக்குரையும் நிராகரித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

8. எதிரிடை அனுபவ பாத்திய கோரிக்கைக்கு மட்டும் நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறியுள்ள நிலையில், அதை பொறுத்து மட்டுமே எதிர்வழக்குரை நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தபோதிலும், நீதிமன்றம் அறிவுறுத்தியபடி நீதிமன்ற கட்டணம் செலுத்த அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிய காலத்தில் நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் காலம் கடந்து செலுத்தப்படும் நீதிமன்ற கட்டணத்தை ஏற்றுக்கொள்வதற்கு உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 148 ன் கீழ் இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.01.09 17:58:46 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.01.09 17:58:50 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.01.09 17:58:54 +0530